## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 10/2022

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு அக்டோபர் மாதம் 03 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஞானசேகர் நாயுடு | மதம் | : இந்து |
| த/பெ | : வெங்கடாசலம் நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 70 | கிராமம் | : அக்ரஹாரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**03.10.2024**

**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

**1.** நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 10.02.1995 ம் தேதியிட்டு என் சித்தப்பா செங்கம்ம நாயுடுக்கு வெங்கடபதி என்ற வெங்கடேஷ்வர ராஜு வகையறா எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 06.02.2002ம் தேதியிட்டு என் சித்தப்பா செங்கம்ம நாயுடு எனக்கும் 2ம் வாதிக்கும் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன்.**(செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. வழக்கு சொத்திற்கான வில்லங்க சான்று இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன்.**(வில்லங்க சான்று வா.சா.ஆ 3 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது)** பட்டா எண்.1283 ல் என் சித்தப்பா செங்கம்ம நாயுடு பெயரில் உள்ள பட்டா இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன்.**(பட்டா வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 1431 ம் பசலிக்கு கொடுக்கப்பட்ட அடங்கல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**(அடங்களில் வட்டாட்சியர் கையெழுத்து இல்லாததால் கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞர் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது. அடங்கல் வா.சா.ஆ 5 ஆக பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)